1993 ஏப்ரல் 28]

510—

உடையாபட்டி புங்காறு அணைக்கட்டு திட்டம்.

* 9822— திரு. ஆ. அறிவழகன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், குளித்தலை தாலுகா, கிருஷ்ணராயபுரம் தொகுதியிலுள்ள உடையாபட்டி புங்காறு அணைகட்டுத் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்

(ஆ) திருச்சி மாவட்டம். குளித்தலை வட்டம். கிருஷ்ணராயபுரம் தொகுதியில் தென்னிலை கிராமத்தில் புங்காற்றின் குறுக்கே அணைக்கட்டு கட்டி மாரியம்மன் குளத்திற்கு நீர் வழங்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளது.

திரு ஆ. அறிவழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே இந்தத் திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே இந்தத் திட்டத்தினுடைய மதிப்பீடு 16,50,000 ரூபாய் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆ. அறிவழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு. நடப்பு ஆண்டிலேயே இந்தத் திட்டம் எடுத்துக்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே ஒரு திட்டம் அரசினுடைய பரிசீலனைக்கு வந்ததற்குப் பின்னாலே. அந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்கிறபோது நாம் பல்வேறு விவரங்களைச் சேகரிக்க வேண்டி இருக்கிறது. நில நிர்வாக ஆணையாளருடைய ஒப்புதல், மாவட்ட ஆட்சியருடைய

ஒப்புதல், அதனுடைய பயன் விகிதாச்சாரம் இவைகள் எல்லாம் அரசு ஒப்புதல் கொடுப்பதற்கு முன்னால் பரிசீலனை செய்யப்படுகிறது. ஆகவே, திட்டங்களைத் தயாரித்துவிட்டால். ஒப்புதலுக்கு வந்துவிட்டது என்று நாம் பொருள் கொள்ள முடியாது. ஆகவே, இந்தத் திட்டத்தில் பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. மாவட்ட ஆட்சியர் ஒத்திசைவு வழங்கவில்லை; பயன் விகிதாச்சாரம் போதவில்லை என்று கூறி இருக்கிறார். ஆகவே, பல்வேறு ஆய்வுகளில் இந்தத் திட்டம் இருக்கிற காரணத்தால் இது பற்றி விரிவான ஒரு ஆய்வினை மேற்கொண்டதற்குப் பின்னாலேதான் எப்படி இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியும் என்பதை நான் தெரிவிக்க முடியும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 511 திரு. கி. இராஜன்பாபு என்கிற தணிக்கைபாபு இருக்கையில் இல்லை

வினா எண் 512—திரு. ஜெ. பாலகங்காதரன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

512—

எறார்பட்டி. சல்வார்பட்டி. டி. சுப்பிரமணியபுரம், பூசாரிபட்டி ஆகிய கிராமங்களுக்கு வைப்பாற்றிலிருந்து குடிநீர் வழங்கல்

*9898—திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) எறார்பட்டி, சல்வார்பட்டி, டி. சுப்பிரமணியபுரம், பூசாரிபட்டி ஆகிய நான்கு கிராமங்களுக்கும் வைப்பாற்றிலிருந்து கூட்டுக்குடிநீர்த் திட்டத்தின் கீழ் குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது? எவ்வளவு மதிப்பீட்டில் அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது எறார்பட்டி, சல்வார்பட்டி, டி. சுப்பிரமணியபுரம், பூசாரிபட்டி ஆகிய நான்கு கிராமங்களுக்கு வைப்பாற்றிலிருந்து கூட்டுக்குடிநீர்த் திட்டத்தின்கீழ் குடிநீர் வழங்கும் உத்தேசம் ஏதும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.